## பாடம் - 7



கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்

அக்கரைக்குச் செல்லவே
ஆட்கள் ஏற்றும் கப்பலாம்

சாமான் ஏற்றும் கப்பலாம்
சண்டை செய்யும் கப்பலாம்

கப்பல் தன்னில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்

தூர தேசம் செல்லுமாம்
துறைமுகத்தில் தங்குமாம்

கலங்கரை விளக்கினால்
கரையைக் கண்டு சேருமாம்.

- அழ. வள்ளியப்பா -

குறிப்பு:
* பாடலைத் தெளிவான உச்சரிப்புடன் வாசிக்கச் செய்க.
* பாடலை சேர்ந்தும் தனித்தும் இசையோடு பாட வழிப்படுத்துக.
* இது போன்ற பொருத்தமான பாடல்களை மாணவர்களுக்கு முன் வைக்கவும்.